**கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்**

**திருவாரூர் மாவட்டம்**

**கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம்,**
**திருவாரூர் மண்டலம்,**
**கூட்டுறவு வளாகம், மருத்துவக்கல்லூரி பின்புறம்**
**தண்டலை, திருவாரூர் – 610 004,**
**இணையதள முகவரி. www. tvrdrb.in**
**மின்னஞ்சல் முகவரி. tvrdrb@gmail.com**


## விளம்பர எண்.02/2020 நாள்.13.03.2020

திருவாரூர் மாவட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் கீழ்க்காணும் வகை கூட்டுறவுச் சங்கங்களில் காலியாக உள்ள உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்காக இந்திய குடியுரிமையுடைய, கீழ்க்காணும் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் **www.tvrdrb.in** என்ற இணையதளம் வழியாக Online மூலம் மட்டுமே **09.04.2020 அன்று பிற்பகல் 5.45 மணி வரை** வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | கூட்டுறவு நிறுவனத்தின் வகை | காலிப்பணியிடங்களின் விபரம் | | பணியிடத்திற்கான சம்பள விகிதம் (தற்போதுள்ளபடி) குறைந்தபட்சம் / அதிகபட்சம் |
|---|---|---|---|---|
| | | பதவியின் பெயர் | எண்ணிக்கை | |
| 1 | கூட்டுறவு விற்பனை இணையம். | உதவியாளர் | 9 | 3900–20200 + ( 2000 GP) |
| 2 | நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை | உதவியாளர் | 7 | 5000–13000 |
| 3 | நகர கூட்டுறவு வங்கி | உதவியாளர் | 14 | 11900–700–17500–850–20900–1050–32450 |
| 4 | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | உதவியாளர் | 14 | குறைந்த பட்சம்:– 3850–100–4250–125–5500–150–7000–175–7175<br>அதிகபட்சம்:– 16000–54000 |
| 5 | பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் | உதவியாளர் | 1 | 4200–20200 + ( 2400 GP) |
| | | **மொத்தம்** | **45** | |

**மேலே குறிப்பிடப்பட்ட காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானது மற்றும் மாறுதலுக்குட்பட்டது.**

## கூட்டுறவு நிறுவனங்கள் வாரியாக காலிப்பணியிடங்கள் பின்வருமாறு

| வ. எண் | சங்கத்தின் பெயர் | பதவியின் பெயர் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை | பணியிடத்திற்கான சம்பள விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | **கூட்டுறவு விற்பனை இணையம்.** | | | |
| 1 | டி.898 தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், திருவாரூர் | உதவியாளர் | 9 | 3900–20200 + ( 2000 GP) |
| | **மொத்தம்** | | **9** | |
| | **நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை** | | | |
| 1 | திருவாரூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை | உதவியாளர் | 7 | 5000–13000 |
| | **மொத்தம்** | | **7** | |
| | **கூட்டுறவு நகர வங்கிகள்** | | | |
| 1 | 378 ஸ்ரீ கமலாம்பிகா கூட்டுறவு நகர வங்கி லிட்., திருவாரூர். | உதவியாளர் | 10 | 11900–700–17500–850–20900–1050–32450 |
| 2 | 27. மன்னார்குடி கூட்டுறவு நகர வங்கி லிட், மன்னார்குடி. | உதவியாளர் | 1 | 11900–700–17500–850–20900–1050–32450 |
| 3 | 603.திருத்துறைப்பூண்டி கூட்டுறவு நகர வங்கி லிட், திருத்துறைப்பூண்டி. | உதவியாளர் | 3 | 11900–700–17500–850–20900–1050–32450 |
| | **மொத்தம்** | | **14** | |
| | **தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள்** | | | |
| 1 | இசட் .ஏ 112 கொரடாச்சேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., | உதவியாளர் | 2 | 5220–140–6060–165–7710–190–8470–220–12870 |
| 2 | 4790, காவாலகுடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., | உதவியாளர் | 1 | 4680–130–5850–160–7450–185–10410 |
| 3 | இசட்.ஏ.111 எருக்காட்டூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., | உதவியாளர் | 1 | 4680–130–5850–160–7450–185–10410 |
| 4 | இசட்.ஏ.71 இலவங்கார்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., | உதவியாளர் | 1 | 4680–130–5850–160–7450–185–10410 |
| 5 | சீதக்கமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., | உதவியாளர் | 1 | 4375–125–5500–150–7000–175–7700 |

| வ. எண் | சங்கத்தின் பெயர் | பதவியின் பெயர் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை | பணியிடத்திற்கான சம்பள விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | பில்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., | உதவியாளர் | 1 | 3850–100–4250–125–5500–150–7000–175–7175 |
| 7 | திருமியச்சூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., | உதவியாளர் | 1 | 4680–130–5850–160–7450–185–10410 |
| 8 | விடையல்கருப்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., | உதவியாளர் | 1 | 4110–105–4530–135–5880–160–7480–185 |
| 9 | வடகரை ஆலத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., | உதவியாளர் | 1 | 4375–125–5500–150–7000–175–7700 |
| 10 | கீழக்காடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., | உதவியாளர் | 1 | 16000–54000 |
| 11 | திருக்களார் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., | உதவியாளர் | 1 | 4375–125–5500–150–7000–175–9800 |
| 12 | புள்ளமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., | உதவியாளர் | 1 | 4680–130/9–5858–160/10–7450–185/16–10410 |
| 13 | கொக்கலாடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., | உதவியாளர் | 1 | 4680–130/9–5858–160/10–7450–185/16–10410 |
| | **மொத்தம்** | | **14** | |

| வ. எண் | சங்கத்தின் பெயர் | பதவியின் பெயர் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை | பணியிடத்திற்கான சம்பள விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | **பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம்** | | | |
| 1 | ஓ.என். 64. உயர் மற்றும் உயர்நிலைப் பள்ளி பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் லிட் | உதவியாளர் | 1 | 4200–20200 + ( 2400 GP) |
| | **மொத்தம்** | | **1** | |
| | **ஆக மொத்தம்** | | **45** | |

**உத்தேசமான – காலிப் பணியிடங்களுக்கான வகுப்புவாரி ஒதுக்கீடு**

| | | |
|---|---|---|
| பொதுப் பிரிவு | : | 14 |
| பிற்படுத்தப்பட்டோர் | : | 11 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர் மரபினர் | : | 9 |
| பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) | : | 2 |
| ஆதிதிராவிடர் | : | 7 |
| ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | : | 2 |
| பழங்குடியினர் | : | – |
| **மொத்தம்** | | **45** |

அ. காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்குட்பட்டது.

ஆ. இத்தெரிவுக்கு நடைமுறையில் உள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக்குப் பின்பற்றப்படும் இடஒதுக்கீடு மற்றும் இனச்சுழற்சி முறை ஒட்டுமொத்த நியமனத்திற்கு பின்பற்றப்படும்.

இ. மேற்குறிப்பிட்ட காலிப்பணியிடங்களில் பெண்கள், ஆதரவற்ற விதவைகள், முன்னாள் இராணுவத்தினர், தமிழ் வழியில் பயின்றோர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கான இடஒதுக்கீடு விதிகள் நடைமுறையில் உள்ள அரசு ஆணைகளின்படி பின்பற்றப்படும்.

ஈ. மேற்படி சம்பள விகிதம் மற்றும் இதரப்படிகள் மேற்குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர் பணிநிலை குறித்த சிறப்புத் துணைவிதிகளுக்குட்பட்டு அமையும்.

உ. தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்படும் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் துணைவிதிகளுக்குட்பட்டு அமையும்.

ஊ. தேர்வில் கலந்துகொள்ளும்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் குறித்த விவரங்கள் தேர்வு நுழைவுச் சீட்டில் தெரிவிக்கப்படும்.

**1) முக்கிய நாட்களும் நேரமும்:**

| | | |
|---|---|---|
| 1. | நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய கடைசி நாள் | **09.04.2020 பிற்பகல் 5.45 மணி வரை** |
| 2. | எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் | **14.06 .2020 முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை** |

**2) தகுதிகள்:**

**அ. வயது**

i) விண்ணப்பதாரர் 01.01.2019 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராக இருக்க வேண்டும் (அதாவது 01.01.2001 அன்றோ அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்).

ii) விண்ணப்பதாரர்கள் 01.01.2019 அன்று கீழ்க்கண்ட வயதினை பூர்த்தி செய்தவராக இருக்கக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1) | ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) மற்றும் இவ்வகுப்புகளை சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் | வயது வரம்பு இல்லை |
| 2) | இதர வகுப்பினர் (OC) | 30 வயது |
| 3) | அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | வயது வரம்பு இல்லை |
| 4) | இதர வகுப்பினைச்(OC) சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் | 48 வயது |
| 5) | இதர வகுப்பினைச்(OC) சார்ந்த மாற்றுத் திறனாளிகள் | 40 வயது |

**<u>ஆ) கல்வித் தகுதி</u> :** ஏதேனும் (i) ஒரு பட்டப்படிப்பு (Any Degree ) (10+2+3 pattern),

மற்றும்

(ii) கூட்டுறவுப் பயிற்சி

- பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பட்டப்படிப்பிற்குப் பதிலாக, பதினைந்து ஆண்டுகள் இராணுவத்தில் பணிபுரிந்தவர்களுக்கு இராணுவத்தால் வழங்கப்படும் பட்டப்படிப்பு சான்றிதழ் (Military Graduation) பெற்றுள்ள முன்னாள் இராணுவத்தினர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் பள்ளி இறுதித் தேர்வும் (SSLC), மேல்நிலைக் கல்வியும் (HSC) முறையாக பள்ளியில் பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

கீழ்க்காண்பவை கூட்டுறவுப் பயிற்சியாகக் கருதப்படும்.

1) தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நடத்தப்படும் கூட்டுறவு மேலாண்மை நிலையங்களில் வழங்கப்படும் கூட்டுறவுப் பயிற்சி (Diploma in Cooperative Management)
2) புது டெல்லி, தேசிய கூட்டுறவுப் பயிற்சிக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள சென்னை நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையம் மற்றும் மதுரை கூட்டுறவு மேலாண்மை நிலையம் மூலம் நடத்தப்படும் உயர் கூட்டுறவுப் பயிற்சி (Higher Diploma in Cooperative Management)

**பின்வரும் பட்டப்படிப்பு படித்தவர்கள் கூட்டுறவுப் பயிற்சி பெறுவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்கள்.**

- வைகுந்த் மேத்தா தேசிய கூட்டுறவு நிறுவனம், புனே வழ்ங்கும் முதுநிலை வாணிப மேலாண்மை (கூட்டுறவு ) பட்டம்.
- பி.காம் (ஆனர்ஸ்) கூட்டுறவு
- எம்.காம் (கூட்டுறவு)
- எம்.ஏ., (கூட்டுறவு)
- பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும், கூட்டுறவில் முதுநிலை பட்டப்படிப்பு
- பி.ஏ., (கூட்டுறவு)
- பி.காம் (கூட்டுறவு)

  பி.ஏ., (கூட்டுறவு) பி.காம்., (கூட்டுறவு) படித்து கூட்டுறவுப் பயிற்சியிலிருந்து விலக்குக் கோருபவர்கள், கணக்கியல் (Book Keeping), வங்கியியல் (Banking), கூட்டுறவு

(Cooperation) தணிக்கை (Auditing) ஆகிய பாடங்களைப் படித்துப் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இல்லையெனில் இவர்கள் கூட்டுறவுப் பயிற்சியினை முடித்திருக்க வேண்டும்.

- 2019–2020ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நடத்தப்படும் கூட்டுறவு மேலாண்மை நிலையங்களில் கூட்டுறவுப் பயிற்சி பயின்று வரும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் இவர்கள் கூட்டுறவுப் பயிற்சியினைப் பெற்று வருவதற்கான சான்றிதழினை (Bonafide Certifcate) சம்மந்தப்பட்ட கல்வி நிறுவனத்திடமிருந்து பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்.
- கூட்டுறவுப் பயிற்சியினை வெற்றிகரமாகப் படித்து முடித்ததற்கான சான்றிதழைப் சமர்ப்பித்த பின்னரே இவர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்கப்படும்.
- 2019–2020ஆம் ஆண்டில் புதுடெல்லி, தேசிய கூட்டுறவுப் பயிற்சிக் குழுவால் சென்னை நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையம் மற்றும் மதுரை கூட்டுறவு மேலாண்மை நிலையம் மூலம் நடத்தப்படும் கூட்டுறவுப் பயிற்சி பயின்று வரும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் இவர்கள் கூட்டுறவுப் பயிற்சியினைப் பெற்று வருவதற்கான சான்றிதழினை (Bonafide Certificate) சம்மந்தப்பட்ட கல்வி நிறுவனத்திடமிருந்து பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்.
- கூட்டுறவுப் பயிற்சியினை வெற்றிகரமாகப் படித்து முடித்ததற்கான சான்றிதழைச் சமர்ப்பித்த பின்னரே இவர்களுக்குப் பணிநியமன ஆணை வழங்கப்படும்.
- விண்ணப்பதாரர்கள் பள்ளி இறுதி வகுப்பு அல்லது மேல்நிலைப் படிப்பு அல்லது பட்டப் படிப்பின்போது தமிழ் மொழியை ஒரு பாடமாக படித்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- கணினி பயன்பாட்டில் அடிப்படை அறிவு பெற்றிருத்தல் வேண்டும் (Knowledge in Computer Application)

**இ) பொது**

- விண்ணப்பதாரர்கள் பிற மாநிலத்தவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் எந்தப் பிரிவைச் சார்ந்தவர்களாக இருப்பினும் இதர வகுப்பினராகவே (OC) கருதப்படுவர்.

- "ஆதரவற்ற விதவை" என்பது அனைத்து வழியிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.4,000/–த்திற்கும் (ரூபாய் நான்காயிரம்) குறைவாகப் பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் உரிய வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி / சார் ஆட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர், கணவனால் கைவிடப்பட்டவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார். மறுமணம் புரிந்தவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார்.

**3) விண்ணப்ப கட்டணம் :**

**அ) விண்ணப்ப பதிவு மற்றும் எழுத்துத் தேர்வுக்கான கட்டணம் ரூ.250/– ஆகும்.**

ஆதி திராவிடர், பழங்குடியினர், அனைத்துப் பிரிவைச் சார்ந்த மாற்றுத் திறனாளிகள், அனைத்துப் பிரிவையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கு இக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகள், சமூகநலத்துறை அலுவலரிடமிருந்து சான்றிதழும், மருத்துவ சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும். ஆதரவற்ற விதவைகள் சான்று பெற்றிருக்க வேண்டும். **மேலே 'இ'ல் தெரிவிக்கப்பட்டவாறு உரிய அலுவலரிடமிருந்து** சான்று பெற்றிருக்க வேண்டும்.

**<u>மத்தியக் கூட்டுறவு வங்கி செலுத்துச்சிட்டு (Pay in slip) முறை (Offline Method)</u>**

"மேற்படி விண்ணப்பக் கட்டணம் கும்பகோணம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி/ தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையகம் அல்லது கிளைகளில் நேரடியாகச் செலுத்தப்பட்டு, அவ்வாறு செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டண இரசீதில் (Candidate's copy of the challan) உள்ள Journal ID என்ற எண்ணை விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்தில் அதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட்டு விண்ணப்பக் கட்டணம் செலுத்திய இரசீதை (Candidate's Copy of the pay- in-slip) scan செய்து பதிவேற்றம் (upload) செய்ய வேண்டும்".

"ஏற்கனவே 26.08.2019 முதல் 03.10.2019 வரையிலான தேதிகளில் விண்ணப்பக் கட்டணம் செலுத்தி விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. அவர்கள் விண்ணப்ப கட்டண இரசீது எண்ணை (SBI Collect DU..... Number or Journal ID of Central Cooperative Bank) மீண்டும் ஒருமுறை பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம்."

ஏற்கனவே 26.08.2019 முதல் 03.10.2019 வரையிலான தேதிகளில் விண்ணப்பித்தவர்கள் தற்போது மீண்டும் விண்ணப்பித்தால் மட்டுமே அவர்களது விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். அவர்களது பழைய விண்ணப்பம் எக்காரணத்தைக் கொண்டும் பரிசீனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. அவர்கள் மீண்டும் விண்ணப்பிக்காவிட்டால் ஏற்கனவே செலுத்திய பணம் திருப்பி அளிக்கப்படமாட்டாது"

**<u>இணையவழி முறை (Online Method)</u>**

விண்ணப்பக் கட்டணத்தை online மூலம் **State Bank of India** இணையதளத்தில் உள்ள **"SBI Collect"** என்ற சேவையைப் பயன்படுத்தியும் செலுத்தலாம். **"SBI Collect"** என்ற சேவையைப் பயன்படுத்தி விண்ணப்ப கட்டணம் செலுத்துவதற்கான வசதி (Link to the "SBI Collect" service in the State Bank of India online payment portal) திருவாரூர் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலைய இணையதளத்திலும் கொடுக்கப்பட்டுள்ளது. Online மூலம் மேற்குறிப்பிட்டவாறு விண்ணப்பக் கட்டணத்தை செலுத்தி முடித்த பின்னர் திரையில் தோன்றும் இரசீதினை (Pdf File) பதிவிறக்கம் செய்து வைத்துக்கொள்வதுடன் அங்கே திரையில் தோன்றும் DU..... எனத் தொடங்கும் எண்ணை (SBI Collect Reference Number) குறித்து வைத்துக் கொண்டு அந்த எண்ணை விண்ணப்பத்தில் அதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட வேண்டும்.

**இணையவழி கட்டணம் செலுத்தும் போது ஏற்படும் இடர்பாடுகளுக்கும் தோல்விகளுக்கும் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம் பொறுப்பாகாது.**

ஆ) மேற்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றி Online மூலம் பணம் செலுத்தும் விண்ணப்பதாரர்கள் DU... எண்ணை பிறரிடம் பகிரக் கூடாது. அதேபோல் மத்திய கூட்டுறவு வங்கியின் Journal ID ஐ பிறரிடம் பகிரக் கூடாது. ஒரே DU... எண்/ Journal ID எண் **ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களில் இருந்தால் அந்த விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை **<u>http://www.tvrdrb.in</u> என்ற இணையதளம் மூலம் 09.04.2020 அன்று மாலை 5.45 மணிவரை பதிவேற்றம் செய்யலாம்.**

இ) கட்டணம் செலுத்தும் முறையை எந்த நேரத்திலும் மாற்றியமைக்கும் உரிமை திருவாரூர் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்திற்கு உண்டு.

**ஈ) ஒருமுறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.**

**4) விண்ணப்பிக்கும் முறை**

அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்ப படிவம் **http://www.tvrdrb.in** என்ற இணையதளம் மூலம் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முன் கீழ்க்கண்டவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

அ) விண்ணப்பப்படிவங்கள் இணையதளம் மூலம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆ) விண்ணப்ப படிவங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவைகளும் அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் ஸ்கேன் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

* i) விண்ணப்பதாரரின் புகைப்படம் – 50kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format)
* ii) விண்ணப்பதாரரின் கையெழுத்து – 50kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format)
* iii) விண்ணப்பதாரரின் சாதி சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)
* iv) கூட்டுறவு பட்டயப் பயிற்சி சான்றிதழ் – 200kb அளவுக்கு மிகாமல் (pdf file)
* v) கூட்டுறவுப் பட்டயப் பயிற்சியினை தற்போது மேற்கொண்டு வருபவர்கள் தொடர்புடைய கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையத்திடமிருந்து பெற்ற அதற்கான தகுதிச் சான்றிதழ் (Bonafide Certifcate) - 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)
* vi) பி.ஏ., (கூட்டுறவு), பி.காம் (கூட்டுறவு) படித்து கூட்டுறவுப் பயிற்சியிலிருந்து விலக்குக் கோருபவர்கள் தங்களது ஒட்டு மொத்த மதிப்பெண் பட்டியலை பதிவேற்றம் செய்ய வேண்டும் – 400 kb அளவுக்கு மிகாமல் (pdf file)
* vii) "SBI Collect" என்ற சேவையைப் பயன்படுத்தி Online மூலம் செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டண இரசீது (Candidate's copy of the pay-in-slip) - 100 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

** viii) மாற்றுத் திறனாளிச் சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

** ix) ஆதரவற்ற விதவைச் சான்றிதழ் - 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

** x) முன்னாள் இராணுவத்தினர் சான்றிதழ் - 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

** xi) பட்டப் படிப்பினை தமிழ் வழியில் படித்ததற்கான சான்றிதழ் (PSTM Certificate) - 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

மேற்குறிப்பிட்ட ஆவணங்களில் (*) குறியீடு செய்யப்பட்டவை அனைத்தையும் (**) குறியீடு செய்யப்பட்டவைகளில் தங்களுக்கு எது பொருந்துமோ அந்த ஆவணங்களை மட்டும் ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும். அவ்வாறு ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்கள் பதிவேற்றம் செய்யப்படாமல் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது **விண்ணப்பதாரர் தவறான தகவல் அளித்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.**மேலும், விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறானவை என்று பின்னர் கண்டு பிடிக்கப்பட்டால் அவ்விண்ணப்பதாரர் தேர்விலிருந்து நிராகரிக்கப்படுவதுடன்,

மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் இனி வருங்காலங்களில் நடத்தப்படும் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவராக அறிவிக்கப்படுவார்.

ஏற்கனவே பணியில் உள்ள பணியாளர்கள் இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் போது, அவர்கள் பணிபுரியும் நிறுவனத்தின் உரிய அலுவலருக்கு கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டும். மேலும், அவ்விண்ணப்பதாரர் வங்கி / சங்கத்தின் உதவியாளர் பணியிடத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில், பணியில் சேருவதற்கு முன்னர் அவர்கள் பணிபுரியும் நிறுவனத்தின் உரிய அலுவலரிடமிருந்து தடையில்லா சான்று (NOC) பெற்று சமர்பிக்கப்படவேண்டும்.

**5) எழுத்துத் தேர்வு**

அ) மேற்கண்ட பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு முறையாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் மட்டுமே எழுத்துத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்துத் தேர்வில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்படவுள்ள நபர்களின் பட்டியல் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்தில் வெளியிடப்படும்.

எழுத்துத் தேர்வு மாவட்டத்தின் குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும். எழுத்துத் தேர்வு எந்த இடத்தில் நடைபெறும் என்பது எழுத்துத் தேர்வுக்கான நுழைவுச் சீட்டில் குறிப்பிடப்படும். எழுத்துத் தேர்வு நடைபெறுவது தொடர்பான விபரங்கள் மின்னஞ்சல் (e-mail) மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். எழுத்துத் தேர்வுக்கான நுழைவுச் சீட்டினை மாவட்ட ஆள் சேர்ப்பு நிலைய இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். நுழைவுச் சீட்டுடன் வராத விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். எழுத்துத்தேர்வுக்கு தனது சொந்த செலவில் விண்ணப்பதாரார் கலந்து கொள்ள வேண்டும்.

ஆ) எழுத்துத் தேர்வு பட்டப்படிப்பு நிலையிலான தரத்துடனும், **பொது அறிவு, அடிப்படைக் கணக்கியல், கூட்டுறவுச் சட்டம் மற்றும் வங்கியியல்** போன்ற பாடங்களை உள்ளடக்கியதாகவும் இருக்கும். எழுத்துத் தேர்வு கொள்குறி வகையில் (Objective type) 200 வினாக்களுடன், 170 மதிப்பெண்களுக்கானதாகவும் தேர்வுக்கான கால அளவு 180 நிமிடங்கள் கொண்டதாகவும் இருக்கும். வினாத்தாள் ஆங்கிலம் மற்றும் தமிழில் அச்சடிக்கப்பட்டிருக்கும்.

இ) மேற்கண்ட எழுத்துத் தேர்வுக்குரிய பாடத்திட்டங்கள் (Syllabus) மாவட்ட ஆள் சேர்ப்பு நிலைய இணைதளத்தில் வெளியிடப்படும்.

ஈ) எழுத்துத் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின் எழுத்துத் தேர்வுக்கான வினா விடைகள் (Key answers) மாவட்ட ஆள் சேர்ப்பு நிலைய இணையதளத்தில் வெளியிடப்படும். வெளியிடப்பட்ட வினா விடைகள் (Key answers) தொடர்பாக ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று தினங்களுக்குள் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்திற்கு எழுத்துப் பூர்வமாக அல்லது இ–மெயில் மூலமாகத் தெரிவிக்க வேண்டும். திருவாரூர் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையக் கூட்டத்தில் அது பரிசீலிக்கப்பட்டு உரிய முடிவுகள் எடுக்கப்படும்.

**6) நேர்முகத் தேர்வு**

i) அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையைப் போல் இரண்டு மடங்கு விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்ற விண்ணப்பதாரர்கள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் தங்கள் சொந்த செலவில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும், நடைமுறையிலுள்ள அரசணைகளின்படி இட ஒதுக்கீடு மற்றும் இனச்சுழற்சி அடிப்படையிலும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

ii) நேர்முகத்தேர்வில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்படவுள்ள நபர்களின் பெயர்ப் பட்டியல் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் இணையதளம் வழியாக வெளியிடப்படும்.

iii) நேர்முகத் தேர்வு நடைபெறுவது தொடர்பான விபரங்கள் மின்னஞ்சல் (e-mail) மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம், நாள், நேரம் ஆகிய விபரங்கள் அடங்கிய நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதங்களை, விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். அழைப்புக் கடிதத்துடன் வராத விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

iv) நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள வரும் விண்ணப்பதாரர்களிடம், அவர்கள் எந்த வகைச் சங்கத்திற்கு எந்த வரிசையில் ஒதுக்கீடு செய்யப்பட விரும்புகிறார்கள் என்ற முன்னுரிமை விருப்பம் (Option) பெறப்படும், நேர்முகத் தேர்வு முடிவடைந்த பின்னர், தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களை கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யும்போது விண்ணப்பதாரர்கள் தெரிவித்த முன்னுரிமை, பெற்ற மொத்த மதிப்பெண் மற்றும் வகுப்புவாரி இனச் சுழற்சி கவனத்தில் கொள்ளப்படும்.

v) எழுத்துத் தேர்வுக்கான மதிப்பெண் மற்றும் நேர்முக தேர்வுக்கான மதிப்பெண் முறையே 85:15 என்ற விகிதத்தில் இருக்கும்.

## 7) தெரிவு செய்யப்படும் முறை

அ) விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்விலும் நேர்முகத் தேர்விலும் பெற்ற ஒட்டுமொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அரசாணைப்படியான இட ஒதுக்கீடு, இனசுழற்சி முறை அவர்கள் தெரிவித்த முன்னுரிமை விருப்பச் சங்க வகை ஆகியவற்றின் அடிப்படையில் கணினி மூலம் சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படுவார்கள்.

மேற்குறிப்பிட்ட முறைப்படி விண்ணப்பதாரர்களை சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யும்போது அதிக மொத்த மதிப்பெண் பெற்றவர்கள் இனச்சுழற்சியை பின்பற்றி அவர்கள் விருப்பம் தெரிவித்திருந்த சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படுவர். குறைவான மதிப்பெண் பெற்றவர்களுக்கு இனச்சுழற்சி அடிப்படையில் அவர்கள் விரும்பிய சங்கத்திற்கு ஒதுக்கீடு கிடைக்காமல் போகலாம். அத்தகைய நேர்வில் அந்தச் சமயத்தில் அவர்களது இனச்சுழற்சிக்கு எந்தக் சங்கத்தில் காலிப் பணியிடம் இருக்கிறதோ அந்தச் சங்கத்திற்கு அவர் ஒதுக்கீடு செய்யப்படுவார்.

ஆ) விண்ணப்பதாரர்களின் தகுதி குறித்த அனைத்துச் சான்றிதழ்களையும், ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள், மற்றும் முன்னாள் இராணுவத்தினர் ஆகிய பிரிவுகளில் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின் அனைத்துச் சான்றிதழ்களையும் சரி பார்த்த பின்னரே தகுதி உடைய விண்ணப்பதாரர்களுக்கு பணி ஒதுக்கீடு ஆணை வழங்கப்படும்.

இ) மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தால் தேர்வு செய்யப்படும் நபர்களுக்குத் தெரிவு மற்றும் சங்கத்திற்கு ஒதுக்கீடு ஆணை (Selection and allotment order) மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் வழங்கப்படும். அவர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட சங்கத்தின் தகைமை வாய்ந்த அலுவலரால் பணியமர்வு ஆணை (Appointment order) வழங்கப்படும்.

ஈ) முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர்களுக்கு முன்னாள் இராணுவத்தினருக்கான இடஒதுக்கீடு முறை பொருந்தாது.

உ) தெரிவு செய்யப்படும் மாற்றுத் திறனாளிகள், தங்களது குறைபாடு, தாங்கள் தெரிவு செய்யப்படும் பதவிகளுக்குரிய பொறுப்புக்களை முழுத்திறனுடன் நிறைவேற்றுவதற்குத் தடையாக இருக்காது என்பதற்கான சான்றிதழை மருத்துவக் குழுவிடம் பெற்று சமர்பிக்க வேண்டும்.

**8)இதர நிபந்தனைகள்**

i) நேர்முகத்தேர்வில் கலந்து கொண்டு நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தால் தெரிவு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் அப்பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் அனைத்தையும் முழுமையாகப் பெற்றிருக்கவில்லையென பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது தேர்வு மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தால் இரத்து செய்யப்படும்.

ii) நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரர்களுக்கு அவ்வாறு நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து பணிநியமனம் கோர உரிமை கிடையாது.

iii) மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இறுதித்தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத் தலைவரிடம் உரிய காரணங்களுடன் மேல் முறையீடு செய்ய வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

iv) காரணம் எதுவும் தெரிவிக்காமல் இந்த அறிவிக்கையை இரத்து செய்வதற்கு / திரும்பப் பெறுவதற்கு / திருத்துவதற்கு / கெடு தேதியை நீட்டிப்பதற்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு உரிமையுண்டு.

v) விண்ணபப்தாரர்கள் அவர்களது சொந்த நலன் கருதி அவர்களது விண்ணபத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன்பாக "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளை" கவனமாகப் படித்து தேர்வு செய்யப்படுவதற்குரிய நிபந்தனைகளைப் புரிந்து கொள்ளவேண்டும்.

vi) விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்காக கொடுக்கப்பட்டுள்ள கடைசி நாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே போதிய கால அவகாசத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏனெனில் கடைசி நாளில் அதிகப்படியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க நேரும் போது, விண்ணப்பம் பதிவேற்றலில் தாமதமோ அல்லது தொழில்நுட்பச் சிக்கல்களோ எழ வாய்ப்புள்ளது.

மேற்கூறிய தொழில்நுட்பக் காரணங்களால் அல்லது வேறு காரணங்களால் விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களைக் கடைசிக் கட்ட நாட்களில் சமர்ப்பிக்க இயலாது போனால் அதற்கு மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம் பொறுப்பாகாது.

vii) விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரத்திற்குப் பிறகு ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்வதற்கான வசதி உடனடியாக நிறுத்தப்படும்.

viii) விண்ணப்பகட்டணம் செலுத்தியது தொடர்பான பிரச்சனை குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் அப்பிரச்சனை ஏற்பட்ட மூன்று நாட்களுக்குள் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்திடம் உரிய காரணங்களுடன் முறையீடு செய்ய வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்பட மாட்டாது.

ix) விண்ணப்பிக்கும் முறை குறித்து எழும் சந்தேகங்களுக்கு விண்ணப்பதாரர்கள் tvrdrb@gmail.com என்ற மாவட்ட மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் மின்னஞ்சல் முகவரியில் அலுவலக வேலை நேரங்களில் தொடர்பு கொள்ளலாம்.

**தலைவர்**
**மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்**
**திருவாரூர்.**